STC.No.479/2025 14.07.2026

PW–1 அபர்ணா, க/பெ.கேசவன்

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**எதிரி ஆஜர்.**

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

**1)** எந்த தேதியில், எந்த நேரத்தில் எதிரியின் மனைவியை நான் மருத்துவமனையில் பார்த்தேன் என்றால் தேதி ஞாபகத்தில் இல்லை, 2021 என்று சரியாக தெரியவில்லை. ஜெயராஜை மருத்துவமனையில் பார்த்ததை தவிர வேறு எந்த மூலமாகவும் எனக்கு பழக்கம் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் சம்பவம் குறித்து பவித்ரா முக்கியமான சாட்சி என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மனுவில் பவித்ராவை சாட்சியாக சேர்த்துள்ளேன் என்றால் இல்லை. நான் இம்மனுவில் பவித்ராவை சாட்சியாக விசாரித்தால் இவ்வழக்கின் உண்மைத்தன்மை தெரியவரும் என்றால் சரிதான். எந்த தேதியில் பவித்ரா மூலமாக எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் மே மாதம் 2024–ம் வருடம் கொடுத்தேன். நான் மனுவில் நான்கு தவணைகளாக எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன், ஆனால் எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் தேதி சொல்லவில்லை, மாதம், வருடம் சொல்லியுள்ளேன். ரூ.70 ஆயிரம் எதிரிக்கு வங்கி மூலமாக பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன், அதற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் என்னிடம் உள்ளது.

2) எதிரி எவ்வளவு நாட்களில் எனக்கு வேலை வாங்கி தருவதாக சொன்னார் என்றால் ஒரு மாதத்திற்குள் வேலை வாங்கி தருவதாக சொன்னார். என்ன வேலை வாங்கி தருவதாக சொன்னார் என்றால் அரசு ஆரம்ப சுகாதார மையத்தில் பி.எஸ்.சி நர்சிங் வேலை வாங்கி தருவதாக சொன்னார். அரசு வேலை வாங்கித்தருவதாக சொன்னார் என்றால் சரிதான். அந்த ஒரு வேலைக்காக தான் நான் நான்கு தவணைகளாக பணம் கொடுத்தேனா என்றால் இல்லை. எதிரியிடம் எங்கு வைத்து ரூ.1 லட்சத்திற்கான காசோலை வாங்கினேன் என்றால் கீழையூரில் எனக்கு தெரிந்த ஒருவர் வீட்டில் வைத்து வாங்கினேன். அவரது பெயர் என்ன என்றால் பெயர் தெரியாது. அந்த நபர் எதிரிக்கு தெரிந்தவரா என்றால் ஆம். மேற்கூறியவர் சொல்லி தான் அவரது வீட்டிற்கு நான் சென்றேனா என்றால் எதிரி சொல்லி தான் அவரது வீட்டிற்கு நான் சென்றேன். எந்த தேதியில் அங்கு சென்றேன் என்றால் 16.12.2024–ம் தேதி.

3) ரூ.2.5 லட்சத்திற்கான காசோலையை எங்கு வைத்து எதிரியிடமிருந்து நான் வாங்கினேன் என்றால் மேற்கூறிய அதே நபரின் வீட்டில் வைத்து தான் வாங்கினேன். அந்த பெயர் தெரியாத நபர் எனது உறவினரா என்றால் எனது தாயாருக்கு தெரிந்தவர். அந்த பெயர் தெரியாத நபரை பற்றிய விபரத்தை எனது மனுவில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது தாயாரை வைத்து எந்தெந்த தேதியில் ஜெயராஜ்க்கு நான் பணம் கொடுத்தேன் என்றால் மே மாதம் 2022–ம் வருடம் ரூ.60 ஆயிரமும், பிப்ரவரி மாதம் 2022–ம் வருடம் ரூ.50 ஆயிரமும், மே மாதம் 2023–ம் வருடம் ரூ.1 லட்சமும், அதன் பின்னர் அதே மாதம் எதிரியின் வங்கிக்கு ரூ.70 ஆயிரம் கொடுத்தேன். ரூ.70 ஆயிரம் எதிரியின் வங்கிக்கு அனுப்பியதற்காக ஆவணங்கள் என்னால்

இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் முடியும். நான் எதிரிக்கு ரூ.5,30,000/—ம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன், அதில் ரூ.2.5 லட்சத்திற்கு மட்டும் எதிரியிடமிருந்து காசோலை வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். மீதமுள்ள ரூ.2,80,000/—த்திற்கு எந்த காசோலையும், புரோநோட்டும் எதிரியிடமிருந்து வாங்கவில்லை என்றால் சரிதான். நான் 4 தவணைகளாக பணம் கொடுத்ததற்கு ஒரே நபர் சாட்சியாக இல்லை, வெவ்வேறு நபர்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கின் காசோலை எண் சொல்ல முடியுமா என்றால் முடியும், இவ்வழக்கின் காசோலை எண்.239234 மற்றொரு வழக்கில் உள்ள காசோலை எண்.239234 அது ரூ.1 லட்சத்திற்கான காசோலை. எனது முந்தைய குறுக்கு விசாரணையில் ஒப்பந்தம் அடிப்படையில் வேலை தருவதற்காக தான் எதிரியிடம் பணம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஒப்பந்தம் அடிப்படை என்பது அரசு வேலைக்கு அல்ல என்றால் சரிதான், வேலை கிடைத்த பின்னர் தேர்வு எழுதி அரசு வேலைக்கு போகச்சொன்னார்.

4) எனது குறுக்கு விசாரணையில் ஒப்பந்தம் அடிப்படையில் வேலை வாங்கி தருவதாக எதிரி சொன்னதாகவும், மனுவில் ESI மருத்துவமனையிலும், அரசு ஆரம்ப சுகாதார மையத்திலும் வேலை வாங்கி தருவதாக எதிரி சொல்லி பணம் பெற்றுக்கொண்டதாக முன்னுக்குப்பின் முரணாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி ஒரு மாதத்தில் வேலை வாங்கி தருவதாக சொன்னதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் நான் பல வருடங்களாக எதிரிக்கு பல தவணைகளில் பணம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். எதிரி என்னிடம் வேலை வாங்கி தருவதாக பணம் பெறவில்லை, எதிரிக்கும், எனக்கும் நேரடியாக தொடர்பு

எதுவும் இல்லை, எதிரியின் காசோலையை வேறு ஒரு நபர் மூலமாக பெற்றுக்கொண்டு இந்த வழக்கை பொய்யாக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.